# தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ)

## மாவட்ட மேலாளர் அலுவலகம், , சென்னை மாவட்டம்

ஆதி திராவிடர் (SC) மற்றும் பழங்குடியினர் (ST) இனத்தை சார்ந்தவர்கள் கீழ்கண்ட திட்டங்களின்கீழ் பயன்பெற) என்ற இணையதள முகவரியில் விண்ணப்பித்து பயன்பெறலாம்

| | பழங்குடியினர் (ST) இனத்தை சார்ந்தவர்களுக்கான திட்டங்கள் |
|---|---|
| 1 | **தொழில் முனைவோர் திட்டம் (Entrepreneur Development Programme (EDP))**<br>➢ விண்ணப்பதாரர் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும்.<br>➢ 18–65 வயதிற்குள்ளாக இருக்க வேண்டும்.<br>➢ ஆதி திராவிடர்களுக்கு திட்ட தொகையில் திட்டத்தொகையில் அதிகபட்சமாக 30% அல்லது 2.25 இலட்சம் எது குறைவானதோ அத்தொகை மான்யமாக வழங்கப்படும்.<br>➢ பழங்குடியினர்களுக்கு திட்டத்தொகையில் அதிகபட்சமாக 50% அல்லது 3.75 இலட்சம் எது குறைவானதோ அத்தொகை மான்யமாக வழங்கப்படும்.<br>➢ தொழில் (Industries), வணிகம் (Business), சேவை (Service) ஆகிய பிரிவுகள் உட்பட அனைத்து தொழில்களுக்கும் மான்யத்துடன் கூடிய கடன் வழங்கப்படுகிறது. |
| 3 | **இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்புத் திட்டம்**<br>**(Self Employment Programme for Youth (SEPY)**<br>இத்திட்டத்தின்கீழ் பயனாளிகளின் எண்ணிக்கையில் 25 சதவீதம் தாட்கோ மூலம் பயிற்சி பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.<br>அ). இலகுரக பயணியர் வாகனம் / ஈப்பு ( Light vehicle / Jeep)<br>ஆ). கனரக வாகனம் ( Heavy vehicle)<br>இ). இதர தொழில்கள் (Others)<br>➢ விண்ணப்பதாரர் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும்.<br>➢ குடும்ப ஆண்டு வருமானம் ரூ.2. 00 இலட்சம் மிகாமல் இருக்க வேண்டும்<br>➢ 18–45 வயதிற்குள்ளாக இருக்க வேண்டும்.<br>➢ ஆதி திராவிடர்களுக்கு திட்ட தொகையில் திட்டத்தொகையில் அதிகபட்சமாக 30% அல்லது 2.25 இலட்சம் எது குறைவானதோ அத்தொகை மான்யமாக வழங்கப்படும்.<br>➢ பழங்குடியினர்களுக்கு திட்டத்தொகையில் அதிகபட்சமாக 50% அல்லது 3.75 இலட்சம் எது குறைவானதோ அத்தொகை மான்யமாக வழங்கப்படும்.<br>ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கு திட்ட மதிப்பீட்டில் அதிகபட்சமாக 50 %அல்லது ( இலகுரக வாகனத்திற்கு) ரூ.4.00 இலட்சமும், கனரக வாகனத்திற்கு 50% அல்லது ரூ.5.50 இலட்சமும், இதர தொழில்களுக்கு 50 அல்லது ரூ.3.75 இலட்சமும் இதில் எது குறைவானதோ அத்தொகை மானியமாக வழங்கப்படும் |
| 8 | **சுயஉதவி குழுக்களுக்கான பொருளாதார கடனுதவி திட்டம் (Economic Assistance to SHG's)**<br>1. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மகளிர் குழுவாக இருத்தல் வேண்டும்<br>2. குழு உறுப்பினர்கள் எண்ணிக்கை குறைந்தபட்சம் 12 முதல் 20 வரை இருக்கலாம்<br>3. குழு உறுப்பினர்களின் குடும்ப ஆண்டு வருமானமும் ரூ.2 இலட்சம் வரை இருக்கலாம்<br>4. இதுவரை எந்த ஒரு அரசு மானியமும் பெறாமல் குழுவாக இருத்தல் வேண்டும்<br>➢ சுழல் நிதி பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்<br>➢ குழு உறுப்பினர்கள் 18–65 வயது வரை உடையவராக இருக்கலாம்<br>➢ ஆதி திராவிடர்களுக்கு திட்டத்தொகையில் அதிகபட்சமாக 30% அல்லது 2.50 இலட்சம் எது குறைவானதோ அத்தொகை மான்யமாக வழங்கப்படும்.<br>➢ பழங்குடியினர்களுக்கு திட்டத்தொகையில் அதிகபட்சமாக 50% அல்லது 3.75 இலட்சம் எது குறைவானதோ அத்தொகை மான்யமாக வழங்கப்படும். |

மேற்கண்ட திட்டங்களில் பயன்பெற விரும்பமுள்ளவர்கள் கீழ் கண்ட தாட்கோ இணையதளத்தில் விண்ணப்பித்து பயன்பெறுமாறு தெரிவிக்கப்படுகின்றது.

**ஆதி திராவிடர்கள் - http://application.tahdco.com**

**பழங்குடியினர்கள் - http://fast.tahdco.com**

மேலும் விவரங்களை கீழ் கண்ட முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்

**மாவட்ட மேலாள. அலுவலகம், தாட்கோ, (மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்) 2வது தளம் எண்.33, இராஜாஜி சாலை சென்னை-600001 தொலைபேசி எண். 044-25246344**

தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டு கழகம் (தாட்கோ)
மாவட்ட மேலாளர் அலுவலகம், சென்னை மாவட்டம்.
சிங்கார வேலர் மாளிகை, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், (8வது தளம்)
எண். 33 இராஜாஜி சாலை, சென்னை–600 001.
தொலைபேசி எண். 044 -25246344, கைபேசி எண். 9445029456 Email ID:-dmmastahdco@yahoo.com

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திருமதி.ம. தனலட்சுமி, பி.எஸ்.சி, எம்.பி.ஏ.,<br>மாவட்ட மேலாளர்<br>தாட்கோ, சென்னை – 1 | முதல்வர்,<br>அனைத்து கல்லூரி நிறுவனங்கள்,<br>சென்னை மாவட்டம். |

அய்யா,

<u>கடித எண்.அ/1226 /2021 நாள் 02.05.2022</u>

பொருள்:- தாட்கோ – சென்னை மாவட்ட மேலாளர் அலுவலகம் – தாட்கோ திட்டங்களின் மூலம் தொழில் தொடங்குதல் – தங்கள் கல்வி நிறுவனகளில் பயின்று சுயதொழில் தொடங்க விருப்பம் உள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தை சார்ந்த மாணவ மற்றும் மாணவியர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி, இணையதளத்தில் விண்ணப்பித்து பயன் பெறச்செய்தல் - தொடர்பாக.

*******

தாட்கோ, சென்னை மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டு கழகம் (தாட்கோ) மூலம் ஆதிதிராவிட / பழங்குடி இனமக்களுக்கு தொழில்முனைவோர் திட்டம் (Entrepreneur Development Programme) இளைஞர்களுக்கான சுய வேலை வாய்ப்புத் திட்டம், (Self Employment Prgramme for youth) மருந்துவமனை அமைத்தல் ஆகிய திட்டங்களுக்கு மானியத்துடன் வங்கிகளின் கடனுதவியுடன் தொழில் தொடங்க ஊக்குவிக்கப்பட்டு வருகிறது. உற்பத்தி, சேவை, வணிகம் சார்ந்த தொழில்கள் தொடங்க ஆதிதிராவிடர் இனத்தை சார்ந்தவர்கள் திட்டத் தொகையில் (Project Cost) 30% மும் அதிகபட்சமாக 2.25 இலட்சம் மானியத்துடனும் பழங்குடியினர் இனத்தை சார்ந்தவர்கள் திட்டத் தொகையில் (Project Cost) 50% மும் அதிகபட்சமாக 3.75 இலட்சம் மானியத்துடனும் 7.50 இலட்சம் வரை வங்கிக் கடன் பெறலாம்.

அவ்வாறு செயல்படுத்தப்படும் திட்டங்களின் பயன்கள் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தை சார்ந்த சுய தொழில் தொடங்க விருப்பம் உள்ள மாணவ / மாணவியர்களை சென்றடையச் செய்யும் வகையில் தங்களின் கல்லூரியில் கல்வி பயின்று

முடித்த (Aluminis') ஆதி திராவிடர் / பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த மாணவ மற்றும் மாணவியர்களுக்கு தாட்கோ திட்டங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி, ஆன்லைனில் (online) தங்கள் கல்லூரியின் வேலைவாய்ப்பு அலுவலர் மூலம் (Placement Officer) தங்கள் கல்வி நிறுவனங்களில் முகாம்களை நடத்தி ஆன்லைனில் (online) விண்ணப்பங்கள் பதிவு செய்து பயன்பெற உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கனிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்ட மேலாளர்,
தாட்கோ, சென்னை.

இணைப்பு : திட்டங்களின் விவரங்கள்

நகல் :
1 மேலாண்மை இயக்குநர், தாட்கோ - அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2 கல்லூரி கல்வி இணை இயக்குநர், சென்னை மண்டலம், - கல்லூரிகளுக்கு உரிய அறிவுரைகள் வழங்கிடும் பொருட்டு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.